[illegible]
பதிகம்

380/1919 LIV

835
294.551

Q.25:417
M19
149231

380

உ

கூடலூர்தாலுக்கா குறிஞ்சிபாடிகுப்பம்
செங்குந்தசர் பழந்தெருவில்
திருக்கோயில் கொண்டெழுந்தருளிய

செடல்மாரியம்மன்பதிகம்.

இவை
கூடலூர் டிராமா உபாத்தியாயர்
M-A. வைத்திலிங்கசெட்டியாரால்
இயற்றியதை

ஷெயார் ஆன்மநேயராகிய
T. S. கேசவலுநாயுடு அவர்கள்
வேண்டுகோளுக்கிணங்கி

திருப்பாதிரிப்புலியூர்
...ணவிலாச அச்சுக்கூடத்திற்
...பிக்கப்பட்டது.
...1919.

25. 417.
N19
149231

உ

ஸ்ரீ செடல்மாரியம்மன் துணை.

குறிஞ்சிப்பாடிகுப்பத்தில் எழுந்தருளியிருக்கும்

செடல்மாரியம்மன் பதிகம்.

காப்பு வெண்பா.

சீர்குறிஞ்சிப்பாடி செடல்மாரியம்மையின்மேல்
பேர்பெருகு நற்பதங்கள்பேசவே—கார்மிடற்று
சங்கரனீன்றெடுத்தஷண்முகற்குமுன்னுதித்த
துங்கமதவேழந் துணை.

சோமசேகர—மெட்டு

கொஞ்சுமொழி ரஞ்சிதமே வாடி வாடி அந்த
குறிஞ்சிபாடிக்குப்பமதை தேடி தேடி அடி
வஞ்சியேசெடலம்மையை நாடி நாடி போற்றி
வந்திடுவோம் நாமிருவர் கூடி கூடி (1)

காசிபனாரஸ்ரவிக்கை போட்டு போட்டு பம்பாய்
கணமுறும்சேலையைக்கட்டி காட்டு காட்டு வீணாய்
கூசாதே கரப்புகொசுவு மாட்டுமாட்டு எந்தன்
கோதையேசிங்காரத்தோடா பூட்டு. (2)

வங்கிகடையம்மாலையும் சீராய் சீராய் காது
வயிரத்தோடு அட்டிகையும் பாராய் பாராய் என்

நங்கையே திலர்தமிட்டு வாராய் வாராய் நாமே
நாடுவோம் செடல்மாரியை நேராய் நேராய் (3)

ஆடுமாடுயாவர்க்கும் நோய் கண்டு கண்டு துன்பம்
அணுகிடில் மாரியென்றுமே விண்டு விண்டு நின்றால்
வோடுமேநோயாருமில்லை தொண்டுதொண்டு என்றும்
உண்மையாய் செய்வாரேகளிக் கொண்டு கொண்டு ()

எத்தனையோ மானிடரும் கோடி கோடி அலை
கேத்தியே ரதமிழுத்து வோடி வோடி வாராங்
சத்து நோயுமில்லாமலே பாடி பாடி மாரி
சன்னிதானத்தையடைவார் நாடி நாடி (5)

ஊரிலெங்கும் தண்ணீர்பந்தல் சீரு சீரு யாரும்
ஓடியேகுடிக்கிறார் நீர் மோரு மோரு எங்க
பாரிலிதைப்போல் மகிழ்ச்சி நேரு நேரு காணேன்
பாக்கியமருளம்மையைப் பாரு பாரு (6)

வேப்பிலை கையில் பிடித்து காட்சி காட்சி நின்று
வீதிநடமாடுமம்மை மாட்சி மாட்சி எது
ஏற்படாதுயறைதீர்க்கும் சூட்சி சூட்சி பதம்
இயற்றினன் வயித்யலிங்கன் சாட்சி சாட்சி (7)

அச்சாபேரிலாகிலே—மெட்டு
ஆயிமகமாயி ஜெகமாரி
செடல் மாரியே
எங்கள் மாரியே —புத்துமாரியே ஆ

சேயர் துயரகற்ற
தேவிகண் பாரம்மா
தினமே நீ—தினமே நீ
தினமெதிராய்—வாருமே ஆ

பெற்றதாய் நீயல்லவோ
பிள்ளைமுகம் பாராய்
பெயரோங்கும் பெயரோங்கும்
பெயரோங்க காருமே ஆ

தீராவினையகற்றும்
தேவர்தொழுமன்னையே
தெரிசனந்—தெரிசனந்
தெரிசனமே தாருமே ஆ

வேம்புரதமேறியே
விளையாடுமீஸ்வரி
எதிராக—எதிராக
எதிராய் வந்தாளுமே ஆ

சிங்கவாகனமேறி
எங்குலவுமாரியே
இடர்யாவும்—இடர்யாவும்
இடர்யாரும் தீருமே ஆ

பாலன் வயித்யலிங்கன்
பதமதைக்கேட்டுமே

பரிவாக—பரிவாக
பரிவாய்வா நீயுமே ஆ

குமரகுருபர-

அமரர் தொழுதிடுமோரி
அன்னையே அருள்தாராய் மீரி

கருணம் உதவிடும் வீரி
சரணம் புரிந்தேனுனைக்கோரி
கதிநீ யாகும் சுகவாரி
சிங்கவா கனமீதேறி அ

அடியார் துயரைத் தீர்த்தாயே
ஆதரி கண்பாராய் நீயே
இதுவே தயவுசெய்வாயே
எந்தனின் எதிர்வருவாயே அ

பரசு ராமனைப்பெற்ருய்
பாரவும் புகழ்பெற உற்ருய்
அரசி யாக அவதரித்தாய்
அணுகும் வினையதை வொழித்தாய் அ

தீராதி தீரறை நீயே
ஜெயித்த தேவி நீதாயே
பாரதனில் புகழ் படைந்தாயே
பராப ரியாயமர்ந்தாயே அ

வைபீத்ய ஸிங்கன் பதம்பாடி
உந்தனை வருந்து நேனுடி
ஜெயமே பெருகமுன்னுடி
செய்வாயே அருளதை நீடி. அ

நான் சென்று கனிபரித்து—மெட்டு.

நல்ல முத்துபல்லக்கு அலங்காரம் நான்
மொழிவதென்றுலோ அபாரம்
சித்திரபொம்மை சிங்காரம்
ஜெகத்துள்ளோர் மதிக்கும் கெம்பீரம்
திறமை யொருவாரம்
செப்புவதுநேரம் எங்கள்
தேவிமாரி அதிகாரம்

இதை சத்திகிளிகள் துவைந்து
ஜோடியாய் புறாமயில்களமைந்து
கீர்த்தனமாடுதே ப்ரமித்து
நேர்த்தியைகாண பூரித்து
நின்றேன் மனக்களித்து
நேர்மையைப்பார் சிரித்து
நிமிஷமே அகலாதினி தனித்து

இதோ தங்கத்தன்னையிழைத்த வேலே
யார் தகுந்த மதிப்பெடுப்பார் காலே
எங்குண்டு சொல்லிதனைப்போலே
எவ்விதம்புகலுவேனுவாலே

இனியிதற்கு மேலே
இருக்காதென்பதாலே நான்
இசைந்து வுரைப்பேனொருங்காலே

பெயர் பெற்ற மேளக்கச்சேரி
பின்னாலே தாசி நடனமீரி
எத்தலஜெனங்கள் பகமாரி
எனவே போற்றுரார் கைதேரி
இனியவரங்கோரி
எத்தனை அதிகாரி
இழிக்குரார் திருடர்களைமாரி

ஜெக மெங்கும் பலரிதை கொண்டாடி
திவிரம் பார்த்திடவே நாடி
மங்கையே வருகிராரே கூடி
மானிலத்தோர் பல்லாய்வோடி
வரம்பெறவே தேடி
மகிழுடனே ஆடி
வயித்தியலிங்கன் பதம் பாடி

வாழ்த்து

வாழ்க விண்ணவர் கற்றவர் மற்றவர்
வாழ்க மானகரோங்கிடும் குப்பமே
வாழ்க ஆலயம் தருகர்த்தாரின்னும்
வாழ்கவே செடல் மாரியும் வாழ்கவே

(முற்றிற்று)